பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 9 புதன்கிழமை (23.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 177

# தமிழர்களுக்குரிய நியாயமான உரிமைகள் கிடைக்க உதவுமாறு புதிய பிரிட்டிஷ் பிரதமரிடம் கோரிக்கை

## லண்டன் தமிழர் குழு கோடன் பிறவுனுடன் சந்திப்பு

— லண்டனில் இருந்து குமரன் —



கோடன் பிறவுண்

கோடன்பிறவுணை அவரது (நிதி அமைச்சு) அலுவலகத்தில் லண்டனில் வாழும் தமிழ்ப் பிரமுகர்கள் குழு ஒன்று நேற்றுச் சந்தித்தது. அப்போதே மேற்கண்ட வேண்டுகோள் அவரிடம் முன்வைக்கப்பட்டது.

லண்டன், மே 23

ஈழத்தமிழர்களின் நியாயபூர்வமான உரிமைகள் கிடைப்பதற்கும், அவர்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவேறவும் உதவுமாறு -

பிரிட்டனின் புதிய பிரதமராக அடுத்த மாதம் பதவியேற்கவுள்ள, ஆளுங்கட்சியான தொழிற்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கோடன் பிறவுணிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு கிடைப்பதற்குத் தமது முழுமையான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாக, இப்போதைய நிதி அமைச்சரும்,புதிய பிரதமராகப் பதவியேற்க இருப்பவருமான கோடன் பிறவுண் உறுதியளித்தார்.

கோடன் பிறவுணைச் சந்தித்த பிரமுகர்கள் குழு இலங்கைத் தமிழ் மக்கள் படும் அவலங்களை அவருக்கு எடுத்து விளக்கியது. தமிழர்களது நியாயபூர்வமான உரிமைகளையும், அரசியல் அபிலாசைகளை (08ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்தது

யாழ்ப்பாணம், மே 23

குடாநாட்டுப் பாடசாலைகளில் பதினொராவது நாளாக நேற்றும் மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்தனர்.

மூன்று மாணவர்கள் கடத்தப்பட்டமை, மாணவர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை ஆகியன தொடர்பாக (08ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நேற்றிரவு குவைத்திலிருந்த நாடு திரும்பினார்.

ஜோர்தானில் நடைபெற்ற ஜி-11 மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி அங்கிருந்து குவைத்துக்குச் சென்றார். குவைத்தில் அந்த நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசிய ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினர் நேற்றிரவு 7.15 மணியளவில் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

## ஓமந்தை ஊடான போக்குவரத்து நேற்றுத் தற்காலிகமாக நிறுத்தம்

வவுனியா, மே 23

ஏ-9 வீதியில் ஓமந்தை சோதனை நிலையம் ஊடான போக்குவரத்து நேற்றுப் பிற்பகல் 4மணியுடன் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகளின் பகுதியில் இருந்து ஓமந்தை சோதனை நிலையம் நோக்கிச் சென்ற வாகனம் ஒன்றை விடுதலைப் புலிகள் மறித்தனர் என்றும்-

அப்போது நிறுத்தாமல் சென்ற அந்த வாகனத்தை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன என்றும்-

தீர்க்கப்பட்ட வேட்டுக்களில் ஒன்று செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் வாகனத்துக்கு சேதத்தை ஏற்படுத்தியது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அங்கிருந்து வெளியேறியது. பாதையும் மூடப்பட்டது. (08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மனித உரிமை மீறல்கள் குறித்து மன்னிப்புச் சபை இன்று அறிக்கை வெளியிடும்

லண்டன், மே 23

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களைக் கண்டித்து சர்வதேச மன்னிப்புச் சபை இன்று அறிக்கை ஒன்றை வெளியிடும்.

அந்த அமைப்பு இன்று லண்டனில் நடத்தவுள்ள செய்தியாளர் மாநாட்டில் இந்த அறிக்கை வெளியிடப்படும்.

இலங்கை உட்பட உலக நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்டித்து இந்த அறிக்கை வெளியாகவிருக்கின்றது.

குறிப்பாக இலங்கையில் மிக மோசமடைந்து வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களை நிறுத்த இலங்கை அரசுக்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைச் சிபார்சு செய்யும் விதத்தில் இந்த அறிக்கை அமையும் என்று அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவர் லண்டனில் தெரிவித்தார்.

## மாங்குளம் பகுதி மீது விமானக்குண்டுவீச்சு!

கொழும்பு, மே 23

இலங்கை விமானப்படையின் 'மிக்' மற்றும் 'கிபீர்' குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக்காலை வன்னியில் குண்டுத்தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

வவுனியாவுக்கு வடமேற்கே 25 மைல் தொலைவில் அமைந்துள்ள மாங்குளம் பகுதி மீது நேற்றுக்காலை 7.00 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் அறிவித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாம் என வானில் இருந்து எடுக்கப்பட்ட படங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நிலை மீதே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு அந்தத் தளம் முற்றாக அழிக்கப்பட்டது என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக் (08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்குக்கு தனித்தனிக் கொடிகள்

கொழும்பு, மே 23

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியாகக் கொடிகள் உருவாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநரும் வடக்கு மாகாணத்துக்கான பதில் ஆளுநருமான மொகான் விஜய விக்கிரம நேற்றுத் தமது அலுவலகத்தில் நடந்த சிறப்பு நிகழ்வொன்றில் இந்தக் கொடிகளைத் தனித்தனியாக ஏற்றி (08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மோதல்

கொழும்பு, மே 23

வவுனியா - நாவற்குளப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் மீது விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று தேசிய பாகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கிறது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது. விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் சம்பவத்தின் பின்னர் குறித்த பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நட (08ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் கடத்தலும், கொலை அச்சுறுத்தலும் இராணுவத்துக்குத் தெரியாமல் நடந்திருக்க முடியாது

### ஒத்திவைப்பு பிரேரணையை சமர்ப்பித்து மாவை உரை



கொழும்பு, மே 23

யாழ்ப்பாணக் குடாநாடு இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம். அங்கு நடைபெற்ற மாணவர்கள் கடத்தலும், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினருக்கு எதிரான கொலை அச்சுறுத்தலும் இராணுவத்திற்குத் தெரியாமல் நடைபெற்றிருக்கவே முடியாது.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மாவை சேனாதிராசா.

மாணவர் கடத்தல், பல்கலைக்கழக சமூகத்தினருக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் ஆகியன தொடர்பாக நேற்றுப் பிற்பகல் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணையை சமர்ப்பித்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணக் கல்விச் செயற்பாடுகள் கடந்த பல வருடங்களாக மிகவும் மோசமான மற்றும் பயங்கரமான நிலையை அடைந்துள்ளன. அவற்றின் மத்தியிலும் அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பெற்றோர்கள், விடாமுயற்சியிலுள்ள மாணவர்கள் ஆகிய தரப்புகளின் அக்கறை காரணமாகவே அங்கு கல்வி இன்னமும் அழியாது உள்ளது.

கல்வி அங்கு உயிர் வாழ்வதை மழுங் கடித்து அதன் மூச்சை நசுக்கிவிடுவதற்கு அரசாங்கம் தனது பலத்தைப் பிரயோகிக் கின்றது.

தமிழர்களையும் அவர்களது வளங்களையும் பூண்டோடு ஒழித்துக் கட்டும் நோக்கிலேயே அரசு செயற்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் உயர்கல்வி (08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசைப் பயங்கரவாதி என்றே சர்வதேச நாடுகள் இப்போது சொல்கின்றன!

### நாடாளுமன்றில் ஐ.தே.கவின் கிரியெல்ல



கொழும்பு, மே 23

முன்னர் விடுதலைப் புலிகளைத்தான் சர்வதேசம் பயங்கரவாதிகள் என்று கூறியது. இப்போது இலங்கை அரசாங்கத்தையும் பயங்கரவாதி என்றே சர்வதேச நாடுகள் சொல்கின்றன.

இவ்வாறு தெரிவித்தார்கண்டி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்லஷ்மன் கிரியெல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்றுச் சபையில் கொண்டு வந்த ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

லஷ்மன் கிரியெல்ல தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் கடத்தல்களுக்கு அரசும் இராணுவமுமே பதில் சொல்ல வேண்டும். கடத்தப்பட்ட நான்கு (08ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. உறுப்பினருக்கு கொலைப் பயமுறுத்தல்

கொழும்பு, மே 23

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நடராஜா ரவிராஜ், ஜோஸப் பரராஜசிங்கம் ஆகியோர் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் படுகொலை செய்யப்பட்டார். ஆனால் இதுவரை கொலையாளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை.

இப்படியான சூழ்நிலையில் இன்று நான் நாடாளுமன்றம் வரும்போது தொலைபேசி மூலம் எனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஐ.தே. கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் அமரதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு குற்றம் சுமத்தினார். (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியானந்தன் நினைவுப் பேருரை

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில், பேராசிரியர் வித்தியானந்தனின் நினைவுப் பேருரை நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் "எமது பிரதேச சமகாலக் கல்விச் சவால்களும் தீர்வுகளும்" என்ற தலைப்பில் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்த்துவார். (அ-203)


HIGHER STUDIES (ENGINEERING) IN INDIA
SONA COLLEGE OF TECHNOLOGY, SALEM - 636 005, INDIA

COURSES OFFERED

Bachelor of Engineering (B.E.)
- Civil Engineering
- Mechanical Engineering
- Computer Science and Engg.
- Electrical and Electronics Engg.
- Electronics and Communication Engg.
- Information Technology
- Fashion Technology

Elegibility: A/L 3 passes (Maths Stream)

Limited Admissions

Post Graduate Courses (M.E)
- MBA - Master of Business Administration
- MCA - Master of Computer Applications










For Admissions Contact :
Mr.K.Sanjey mobile-0773107808 sanjey20@hotmail.com
Mr.S.Saaruban(India) mobile-00919940210057 saaru_10@yahoo.com
Mr.S.Jeyakanth mobile-0773867257 jeyakanth84@gmail.com
Mr.S.Elankeethan mobile-0775936343 keethan_15@yahoo.com
V4 CONSULTANCY SERVICE
The Express Institute, Irupalai, Kopay
phone 021-2225840


## நெஞ்சைவிட்டு அழியாத 5ஆம் ஆண்டு நினைவுகளில்...

தோற்றம் 1961 - 07 - 18



மறைவு 2002 - 05 - 20

### அமரர் இரத்தினம் பாஸ்கரன்

திதி: 25-05-2007

அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
எம் குடும்பத்தின் குலவிளக்கே!
உம் இனிய வதனமும் நினைவுகளும்
எம்மைவிட்டு என்றும் நீங்காதய்யா.

சாந்த மஹால்,
அண்ணாசிலையடி,
கரணவாய். (60781)

உன் பிரிவால் துயரும்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை



அமரர்

### வீரகத்திப்பிள்ளை தங்கராசா

தோற்றம்: 06-10-1933 மறைவு: 23-04-2007

எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (23.05.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெனியம்மன் கோயிலடி,
வியாபாரி மூலை. (60791)

மனைவி,
பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், பூட்டப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 18 - 02 - 1935



மறைவு 23 - 04 - 2007

### அமரர் வைத்திலிங்கம் காங்கேசு

கடந்த 23.04.2007 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தை வை.காங்கேசு அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் தொலைபேசி, தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று [23.05.2007] புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (60874)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை புண்ணியகாந்தன் (கணேஸ்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் ஈஞ்சடி வைரவர் ஒழுங்கை, சுதுமலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை புண்ணியகாந்தன் 19.05.2007 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் பகவதிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற கணேஸ் பவானி, சுதாகரன் (லண்டன்), ஜெயவனஜா (ஆசிரியை, யா/ உடுவில் ம.க.), சிவச்சந்திரன் (லண்டன்), பாரதீபா, இதயச்சந்திரன் (இந்தியா), ஜானுச்சித்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யாழினி (கனடா), தயாபரன் (ஆசிரியர், யா/ சண்டிலிப்பாய் வடக்கு அ.த.க.பா), உதயகுமார் (உருத்திரபுரம்), முகுந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும் சஞ்சயன், சம்யுதா ஆகியோரின் அன்புப் பேரனும் இராசலிங்கம், காலஞ்சென்ற அருணகிரி, காலஞ்சென்ற புனிதவதி, கணேசலிங்கம், திலகவதி, நடேசலிங்கம், விமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் புண்ணியமூர்த்தி, கிருபாமூர்த்தி, ஏகாம்பரம், சேதுராஜா (அதிபர் - யா/ நெல்லியடி ம.ம. வித்தியாலயம்), காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2007) பிற்பகல் 2 மணிக்கு கோவில் வீதி, குருமன்காடு, வவுனியா என்ற முகவரியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சேதுராஜா (மைத்துனர்).

### சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்



நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆதீன பரம்பரை பிரதமகுரு சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் 21.05.2007 இந்தியாவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுவாமிநாத பாலசுந்தரக்குருக்கள்
(பாலா மணிக்குருக்கள் - சகோதரர்)

52, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0777371255.

## தவறிவிட்டது

கைதடி வடக்கு, கைதடி என்னும் முகவரியைச் சேர்ந்த சிவயோகநாதன் இராஜலக்சுமி என்பவரது தேசிய அ.அட்டை (488611267V) 15.05.2007 அன்று கைதடிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கோழி இறைச்சி விற்பனை

பிறிமா கோழி இறைச்சி வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரிபாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்.
(மிலேனியம் றெஸ்றோரண்ட் முன்பாக)

## தவறிவிட்டது

ஸ்ரேசன் றோட், கோண்டாவிலைச் சேர்ந்த முருகையா அன்னலட்சுமி என்பவரது விடேச அடையாள அட்டை இல.0902037453 திருநெல்வேலிக்கும் நந்தாவில் அம்மன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

## மணமகள் தேவை

கிறிஸ்தவ, 30 வயதுடைய, அரச தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

தொடர்பு: த. வசந்தி,
30/18, முத்தவிநாயகர் வீதி,நல்லூர்.
தொலைபேசி எண்: 0778151289.

## நாய் விற்பனைக்கு

1½ வயதுடைய பெண் அல்ஷேசன் நாய் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 125, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

கொழும்பு - யாழ் விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
EURO GROUP
077 3846998
[illegible]

## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணகம் 12 - 10 - 1986



விண்ணகம் 23 - 05 - 1998

### து.போல் கஜேந்திரன்

ஒன்பது ஆண்டுகள் சென்றாலும் ஓயாது நம் கவலை
பண்பாக நீ வாழ்ந்திட்ட பாசத்தால் பரலோகம் அழைத்தாரோ பரன் மகன்.

உன் பிரிவால் தவிக்கும்:
அம்மா, அப்பா, சகோதரர்கள்.

திருமதி ஹேமா தாயகுமாரன் [அம்மா- ஆசிரியர்]
யா/கொழும்புத்துறை சென்.யோசப்ஸ் வித்தியாலயம். (60789)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை கந்தையா



நெடுந்தீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இல.87, கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா 21.05.2007 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காமாட்சியின் (கமலம் ஆசிரியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, பொன்னையா மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரனும் சபாராணி, பாக்கியராணி, காலஞ்சென்ற யோகதாசன் மற்றும் தேவராசன் (வவுனியா), மோகன தாசன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் கனகசபை, மனோகரதாசன், செல்வேந்திரராணி, விஜயலட்சுமி ஆகியோரின் மாமனும், சுதாகரன், பிரபா, தர்மஜா, திலக்ஷகா, பிரகாஷ், பிரியந்தா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2007) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

87, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வ.கனகசபை (மருமகன்)
பொது முகாமையாளர்
அனலைதீவு ப.நோ.கூ.சங்கம் (60873)

### முத்தையா சண்முகநாதன்

(உரிமையாளர், சண்முகம் கராஜ்)



யாழ்ப்பாணம், சோனகதெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சண்முகநாதன் (சண்முகம் கராஜ் உரிமையாளர்) 21.05.2007 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா தம்பதிகளின் மூத்த புதல்வனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் யோகநாதன், தெட்சணாமூர்த்தி, கலைநாதன் (பிரான்ஸ்), ஸ்ரீதர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இலங்காதேவி (ராணி), விஜயலக்சுமி, சுகுணா, சுஜாமதி ஆகியோரின் அன்பு மாமனும் ஆனந், கவிதா, சுகந்தினி, சுலக்ஷன், ராம்கி, நிக்ஷன், ஜெனிஷா, விதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் லக்சிகனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

சோனகதெரு,
168, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
ச.யோகநாதன்,
ச.தெட்சணாமூர்த்தி. (60866)

### இரத்தினம் இரத்தினபூபதி



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் இரத்தினபூபதி 21.05.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஆச்சியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற க. இரத்தினத்தின் அன்புச் சகோதரியும் து.இரத்தினத்தின் அன்பு மனைவியும் கமலாதேவி (கனடா), சறோஜினிதேவி, நேசகுமாரன் (இத்தாலி), பாலகுமாரன் (கனடா), கலாதேவி, தேவகுமாரன் (சுவிஸ்), சாந்தினி (ஆஸ்திரேலியா), மாலினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் இராஜரட்ணம் (சுவிஸ்), அருந்தவமலர் (இத்தாலி), புஸ்பமாலா (கனடா), ஐங்கரவேள் (R.D.O. நல்லூர்), சஜித்தா (சுவிஸ்), சுந்தரேஸ்வரன் (ஆஸ்திரேலியா), ரவீந்திரகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் உஷாராணி, சிவகுமார், சுதாகரன், காமினி, சுஜிகரன், சதீஸ், சர்மிளா, லக்சாயினி, சஜீந்திரன், ஜனனி, துவாரகன், துஸ்யந்தனி, துஷியன், வாசவன், திவ்யன், நிருபனா, விதுஷனா, ஜீவிகா, பிருந்தாபன், ஹரிஸ்னி, சகிலன், சாருஜன் ஆகியோரின் அன்பு பேத்தியும் அபிராம், துர்க்கா, அஸ்வின், இஷானா, சமீனா ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2007) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வன்னிய சிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
தாவடி. (60880)

தகவல்:
தா. ஐங்கரவேள்
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகடனப்படுத்தப்படாத 4ஆவது ஈழப்போர் இதுவரை இல்லாத செலவினைத் தரும்....!

**பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் கடந்த 20ஆம் திகதிய இதழில் எழுதியிருந்த கட்டுரையில் இருந்து தொகுக்கப்பட்டது இக்கட்டுரை.**

இம்மாதம் 14ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 2 மணிக்கு சற்றுப் பிந்தி இலங்கை விமானப் படையின் 'பீச் கிராப்ட்' எனப்படும் உளவு விமானம் திருகோணமலை வான்பரப்பில் பறந்து வேவு பார்ப்பதில் ஈடுபட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வான் படைத் திறமையை வெளிப்படுத்தியதிலிருந்து இம்மாதிரியான உளவு பார்க்கும் பணிகள் வழமையாக நடைபெற்றுவருகின்றன.

விடுதலைப் புலிகளின் விமானம் என்று சந்தேகம் கொண்ட இலங்கைக் கடற்படையின் ரோந்துப் பிரிவினர் அந்த உளவு விமானத்தை நோக்கிச் சுட்டார்கள். ஆனால், விமானம் பாதிக்கப்படவில்லை. இது தவறாக அடையாளம் காணப்பட்ட ஒரு சம்பவம் என்றபோதிலும் ஒரு விடயம் இதில் வெளிப்பட்டுள்ளது. தரை நிலையில் விமானத் தாக்குதல் எதையும் எதிர் கொள்ளத் தரைப்படைகள் ஆயத்தமாக இருப்பது போலவே கடலிலும் கடற்படையினரும் கடலில் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்பதே அது.

**புலிகளின் நிலைகள் வில்பத்துக் காட்டில் இல்லை**

வில்பத்து தேசிய பூங்காவில் மே 13ஆம் திகதி இரு இராணுவக் குழுக்கள் தேடுதல் நடவடிக்கையொன்றை ஆரம்பித்தன. ஒரு குழு [illegible]க் கரையிலிருந்து புறப்பட்ட அதேசமயம் இன்னொரு குழு அனுராதபுர மாவட்டத்தில் பூங்காவின் எல்லையிலிருந்து மேற்கு திசை நோக்கி நகர்ந்தது. கடந்த ஆண்டு வன விலங்கு ஆர்வலர்கள் பலர் கொல்லப்பட்ட இடமான கொக்குமோட்டை என்ற இடத்தில் இரு குழுக்களும் சந்தித்தன.

> **★ மிக் 29 ரக விமானங்கள் நான்கை வாங்குவதற்குத் திட்டம். இவை ஒவ்வொன்றும் 1.6 பில்லியன் ரூபா மதிப்பானவை.**
>
> **★ இனப்பிரச்சினையில் அதிகூடிய செலவை ஏற்படுத்தியிருப்பது இப்போது இடம்பெற்றுவரும் பிரகடனப்படுத்தப்படாத போரேயாகும்.**
>
> **★ போர்ச்செலவுகள் 'ரொக்கட்' வேகத்தில் உயர்ந்து செல்வதற்கு வெளிப்படைத் தன்மையும் பொறுப்பேற்கும் தன்மையும் இல்லாமையே பிரதான காரணங்கள் என்று கூறலாம்.**

பின்னர் இரு குழுக்களும் தெற்கு நோக்கிய திசையில் புறப்பட்டு தமது தேடுதலை சனிக்கிழமை 19ஆம் திகதி முடித்துக்கொள்ள விருந்தனர். இந்த தேடுதல் நடிவடிக்கையின் மூலம் வில்பத்துக் காட்டில் விடுதலைப் புலிகள் தமது விமானங்கள் இறங்கவும் வானில் ஏறவும் மறைவான ஓர் இடத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற அறிக்கைகள் யாவும் பொய்யானவை என்பது புலனாயிற்று. அவ்வாறான புலிகளின் நடவடிக்கை தொடர்பான எதுவிதமான தடயமும் கிடைக்கவில்லை. அத்துடன் சடுதியாக உருவான ஓடுபாதையோ துப்புரவு செய்யப்பட்ட காட்டுப் பகுதியோ காணப்படவில்லை.

**விமான சேவைப் பிரதிநிதிகளின் அதிர்ச்சித் தகவல்**

கடந்த வியாழக்கிழமை கொழும்பின் ஊடாகச் செயற்படுகின்ற விமான சேவைகள் சபையின் பிரதிநிதிகள் குழுவொன்று தபால், விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் திலக் கொலுவூரைச் சந்தித்தது. அக்கூட்டத்தில் குழுவினர் ஒரு குண்டைத் தூக்கிப்போட்டனர். விமான நிலையம் மே 10ஆம் திகதியிலிருந்து இரவு 10.30மணியிலிருந்து காலை 4 மணி வரை மூடியிருக்கும் என்ற தகவல் ஒரு விமான சேவை நிறுவனத்துக்கும் அதிகார பூர்வமாக குறிப்பாக எழுத்து மூலம் அறிவிக்கப்படவில்லை என்பதே அத்தகவல். ஊடகங்கள் மூலமே இத்தகவலைத் தாங்கள் அறிந்து கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

விமான நிலையத்தின் ஆகாயப்பரப்பின் பாதுகாப்பு நிலை குறித்து அவர்கள் கேள்விகள் எழுப்பினர். பண்டாரநாயக்க விமான நிலையத்தின் மோசமான நிலைமை மற்றும் இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் மோசமான தொழிற்பாடுகள் பற்றிய அவர்களின் கவலைகள் வெளிப்பட்டன.

இதற்குக் காரணம் துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமல் ராஜபக்ஷ இந்த வாரம்தான் பொறுப்பேற்றிருந்ததும் மற்றும் இப்போதைய செயலாளர் விரைவில் மாற்றப்படவிருக்கிறார் என்பதுமாகும்.

**விமானியின் முறைப்பாடு**

சுவதேச விமானப் போக்குவரத்தின் விமானி ஒருவர் முறைப்பாடு ஒன்றை தெரிவித்திருக்கிறார். தமிழ்நாடு சென்னை விமான நிலையத்திலிருந்து தாம் புறப்பட்டு ஆசிய விமானம் நிலையம் ஒன்றை நோக்கி தான் போய்க் கொண்டிருந்தபோது தரையிலிருந்து தமது விமானம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தின் மீது இரவில் குண்டு வீச எத்தனித்த நாளில் இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. அன்றைய


மிக் 29 பயிற்சி விமானம்

தினம் வவுனியாவுக்கு மேலாகப் பறந்த வர்த்தக விமானம் ஒன்றின் மீதும் தாக்குதல் நடத்த எத்தனிக்கப்பட்டதாகவும் அந்த விமானம் மிக உயரத்தில் பறந்ததால் தாக்குதலுக்கு உள்ளாகவில்லை என்றும் ஒரு தகவல் அப்போது வெளியாகியிருந்தது. இந்த முறைப்பாடு பற்றி இப்பொழுது முழு அளவில் விசாரணை நடைபெற்றுவருகின்றது. இந்த விசாரணைகளின் விவரங்களைப் பொறுத்து இலங்கை அதிகாரிகள் கண்டனத்துக்குள்ளாகலாம் மற்றும் புலிகளின் விமானத் தாக்குதலை அடுத்து உருவாகியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக மீள் பரிசீலனை செய்யுமாறு காப்புறுதி நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட வேண்டியும் நேரலாம் என்று கூறப்படுகின்றது.

**ஜனாதிபதியின் கவனத்தை ஈர்த்துள்ள விடயம்**

மூன்று தடவைகள் தாக்குதல்களையும் தாக்குதல் முயற்சியையும் மேற்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளின் காரணமாக அரசாங்கம் மற்றும் ஏனைய வட்டாரங்களில் ஏற்படுத்தியுள்ள கவலைகளை மேற்படி நிலைமைகள் எடுத்துக்காட்டுகின்றன.

கடந்த வாரம் இலங்கை விமானப்படை மிக் 29 விமானங்களைக் கொள்முதல் செய்யவிருக்கிறது என்று இப்பத்தியில் எழுதப்பட்ட விடயம் ஜனாதிபதி ராஜபக்ஷவின் கவனத்தையும் கவர்ந்துள்ளது.

**மிக் 29 விவகாரம்**

இம்மாதம் 16ஆம் திகதி ஊடக ஆசிரியர்களைச் சந்தித்துப் பேசுகையில் ஜனாதிபதி - மிக் 29 ரக விமானங்களைக் கொள்முதல் செய்வதற்கு எடுக்கப்பட்ட முடிவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களை அடுத்து எடுக்கப்பட்ட ஒன்றல்ல. விமானப் பாதுகாப்பு அமைப்பை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் ஓர் அம்சமே அது. மிக் 21 ஜெட் விமானங்களுக்குப் பதிலாக மிக் 29 ஜெட்களை சேவையில் அமர்த்தும் நோக்கமாகும். மாட்டு வண்டிலை மேர்ஸிடஸ் பென்ஸ் காரினால் மோதித் தகர்க்கும் முயற்சி என்று விமர்சிக்கப்பட்டதுபோன்ற விடயமல்ல - என்று கூறியுள்ளார்.

புலிகளின் தாக்குதலையடுத்து மிக் 29 ஜெட் விமானங்களை வாங்க முடிவு செய்யப்படாவிட்டாலும் அவைகளை வாங்கும் யோசனை இருந்துள்ளது என்பதை ஜனாதிபதி உறுதிப்படுத்தியிருக்கிறார். பாதுகாப்பு அமைச்சராகவும் ஆயுதப்படைகளின் பிரதம தளபதியாகவும் ஜனாதிபதி விளங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. வேறு விதமாகக் கூறுவதானால் மிக் 27 ஜெட் விமானங்களை ஒதுக்கிவிட்டு பதிலாக மிக் 29 ஜெட் விமானங்களை அமர்த்துவதாகும்.

எவ்விதமான விமானங்களை வாங்க வேண்டும், பாதுகாப்பு அமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பது குறித்து ஆலோசனை கூறுவதல்ல எமது நோக்கம். அது முற்று முழுதாக அரசாங்கத்தின் விவகாரம். இருந்த போதிலும் நாட்டின் நன்மையை உத்தேசித்து சில விடயங்களைச் சுட்டிக்காட்டியாக வேண்டும். ஏனென்றால், அப்படியான கொள்முதல்களுக்கும் போரைத் தொடர்வதற்கும் பொதுப் பணம் தான் செலவு செய்யப்படுகின்றது.

**தொகுப்பு: நந்தன்**

மிக அண்மையில் வாங்கப்பட்ட மிக் 27 விமானங்களை மிக் 29 விமானங்களுக்காக அப்புறப்படுத்துவதை விமானப்படையின் முழு சம்மதமில்லாமல் அரசாங்கம் செய்ய மாட்டாதென்பது தெளிவான விடயம். புலிகளின் விமானப் படையின் அச்சுறுத்தலை கணித்து மதிப்பீடு செய்பவர்கள் அவர்கள்தான். எதிர் நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள்தான் தீர்மானிப்பர். வான்பரப்பில் போரை நடத்துபவர்களும் அவர்களே

அப்படியான ஓர் அச்சுறுத்தல் இருப்பதை அவர்கள் மதிப்பீடு செய்திருக்கிறார்களா?

மிக் 27 விமானங்களை அப்புறப்படுத்துவது இப்பொழுது அவசியம் என்று அவர்கள் கருதுகிறார்களா? அவசரமாக இதைச் செய்வதற்கான அவசியம்தான் என்ன?

புலிகள் தாக்குதல்கள்நடத்திய பிறகு இந்த ரக விமானங்களை வாங்குவதற்கு யோசிக்கப்படவில்லை என்றால் இக்கேள்விகளும் இவை போன்ற மற்றக் கேள்விகளும் பொருத்தமானவையாக அமையும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் மிக முன்பதாகவே இவைகளை வாங்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயின் மிகப்பெரிய செலவில் இந்த நான்கு மிக் 27 விமானங்கள் கடந்த வருடம் ஏன் வாங்கப்பட்டன என்பதற்கு விடை என்ன? குறிப்பாக சில மாதங்களுக்குள் மிக் 29 விமானங்களை வாங்கும் திட்டம் இருந்திருப்பின் மிக் 27 விமானங்கள் கடந்த வருடம் டிசெம்பரில்தான் கொள்முதல் செய்யப்பட்டன. 5 மாதங்களுக்கும் கூட சரியாகப் பயன்படுத்தப்படவில்லை. கடந்த வாரம் வெளிப்படுத்தப்பட்டதுபோல் அவைகளில் இரண்டு பயன்படுத்த முடியாத நிலைக்கு வந்துவிட்டன. ஒன்றுபின்னர் திருத்தப்பட்டுவிட்டது. மற்றதற்கான உதிரிப்பாகங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**நான்கு மிக் 29 விமானங்கள்**

இலங்கை விமானப்படை நான்கு புதிய இதே விலைக்கு மிக் 29 U.B. பயிற்சி விமானம் ஒன்றையும் வாங்க விமானப்படை விரும்புகிறது. உதிரிப்பாகப்பொதி மற்றும் புதிய ஹெலிகளையும் பெற்றுக்கொள்ள விரும்புகின்றது. மற்றும் கைவசமுள்ள ஹெலிகொப்டர்களை சீரமைக்கவும் தரம் உயர்த்திக்கொள்ளவும் விரும்புகின்றது.

**145 மில்லியன் அமெரிக்க டொலர்**

இந்த முழு ஒப்பந்தத்திற்குமான விலை மதிப்பு 145 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (ரூ.16,095,000 மில்லியன்) என்று மதிப்பீடு செய்யப்படுகின்றது. இதுவும் மிக்-29 விமானங்களுக்கான ஏவுகணைகளின் மதிப்பைத் தவிர்த்த மதிப்பீடாகும். இந்தக் கொள்முதலை அரசாங்கத்தின் லங்கா இராணுவத் தளபாட மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலமாக செய்துகொள்ளவே அரசு விரும்புகின்றது. இந்த நிறுவனம் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் இயங்குகின்றது.

ஆக, கடந்த வருடம் மிக்-27 விமானங்கள் வாங்கப்பட்ட வகையிலும் மற்றும் வான் பாதுகாப்பு தொடர்பான செலவுகள் யாவையும் சேர்த்தால் மொத்தம் ரூ.171,183,844,800 ஆகின்றது. வேறு வார்த்தைகளில் சொன்னால், 17.1 பில்லியனுக்கு சற்று அதிகமாகும்.

## சண்டை விமானங்களைப் புலிகள் வாங்குவரேன்று அரச தரப்பினர் முன்கூட்டியே ஊகிக்கின்றனரா?

மிக் 29 SM பன்முக செயற்பாட்டுச் சண்டை விமானங்கள் கொள்முதல் செய்யவிருப்பதாக நம்பகமாக அறியமுடிகின்றது. இந்த விமானங்கள் வேறு பல தகுதிகளுடன் வானிலிருந்து தரை நோக்கி ஏவுகணைகளையும் தொலைக் காட்சி மற்றும் லேசர் கதிர் வழிகாட்டல்களுடன் குண்டுகளையும் பொழியக் கூடியவை. எழு அல்லது பத்து வருடங்களில் திருப்பி செலுத்தக்கூடிய முன் ஏற்பாட்டு கடனாக இந்த உடன்பாடு. இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வருமானால் பதவிக்குவரும் அரசாங்கங்கள் எதுவானாலும் செலுத்தி முடிக்கவேண்டிய கடனாகும். இறுதி முடிவு எடுக்கப்படாவிட்டாலும் பேச்சுகள் கொழும்பில் தொடர்கின்றன.

மிக்-29SM ஒவ்வொன்றின் விலையும் சராசரியாக 15 மில்லியன் அமெரிக்கா டொலர் (ரூ.1,565 மில்லியன்) என்று தெரிகின்றது.

**மிக் 29 உருவான நோக்கம்**

பன்முகப் பயன்பாட்டு மிக்-29 சண்டை விமானங்களை நேட்டோ- வட அத்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் பல்கிரம் (Fulcrum) என்று அழைக்கின்றன. இவை மேற்குலகநாடுகளின் வான் சண்டை விமானங்களை எதிர்கொள்வதற்கான ரஷ்யாவின் கண்டுபிடிப்புகளாகும்.

ஆக, மிக்-29 விமானமானது இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கிடையிலான வான் பரப்பின் மேலாண்மையை நிர்ணயிப்பதற்கான போட்டாபோட்டியின் விளைவு என்று கூறவேண்டும்.

**இப்படியும் கொள்ளலாமே...**

ஒருசில இலகுரக விமானங்களையே கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்காலத்தில் நவீன சண்டை விமானங்களை

(07ஆம் பக்கம் பார்க்க)

**வெளிமாவட்டம் செல்வதற்கான அனுமதி:**

## வலி.மேற்கு மக்கள் அனுபவிக்கும் சிரமங்களும் அலைச்சல்களும்

**வாசகர் திருமுகம்**

யாழ்.குடாநாட்டை விட்டு வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் சில உத்தியோக ரீதியான நடவடிக்கைகளால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

தமது போக்குவரத்துக்கான அனுமதியைப் பெற இவர்கள் படும் கஷ்டங்கள்:

1) வெளிமாவட்டத்துக்குச் செல்வதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு கிராம சேவகரின் சிபார்சுக் கடிதம் பெறவேண்டும் .

2) முதலில் அவ்வப்பகுதி பிரதேச செயலகத்தில் பிரயாணப் படிவம் பெறவேண்டும்.

3) இப்படிவம் பூரணப்படுத்தப்பட்ட பின், ஒரு கடிதம் தட்டச்சுச் செய்யப்பட்டு கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலர் அனுமதி பெறவேண்டும்.

4) வலிகாமம் மேற்கைப் பொறுத்தவரையில் இப்பிரயாணப் படிவம் தட்டச்சு செய்யப்பட்ட கடிதங்களில் பிரதேச செயலரும் கிராம அலுவலரும் ஒப்பமிட்டு, பிரயாணம் செய்கின்ற பயணிகளின் தேசிய அடையாள அட்டைகள் கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

5) இதன்பின்னர், பிரயாணப்படிவம், கடிதம், அடையாள அட்டை (பிரதேச செயலர், கி.சே. அலுவலர் உறுதிப்படுத்தப்பட்டது), இத்துடன் தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படும் கிளியரன்ஸ் படிவம் மற்றும் நிவாரண அட்டைகள், வெளிமாவட்டப் பயணத்திற்கான காரணம் கொண்ட கடிதம் போன்றவற்றின் நான்கு பிரதிகள் போட்டோஸ்ரட் செய்யப்பட்டு, ஒவ்வொன்றும் நான்கு (04) பகுதிகளாக்கப்பட்டு நான்கு கோவைகளில் இடப்படவேண்டும்.

6) இவ்வாறு நான்கு கோவைகளில் இடப்பட்ட ஆவணங்களை முதலில் மானிப்பாய் சிவில் நிர்வாக (பாதுகாப்புப் படையின்)த்திற்கு கொண்டு சென்று, அவர்கள் ஓர் இலக்கம் இடவேண்டும். ஓர் சிறிய எழுத்திலான துண்டைக் கொடுப்பார்கள். அதனை அராலி கடற்கரைப்பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்புப் படையினரிடம் கொண்டு சென்று ஒப்படைக்கவேண்டும்.

7) இத்துடன் தமது கடமை முடிந்ததென எண்ணும் பொதுமக்களுக்கு கடந்த 01.04.2007 முதல் புதியதோர் பிரச்சினை எழுந்துள்ளது. இவ்வாறு கொண்டு செல்லப்படும் கோவையுடன் வெளிமாவட்டத்தில் (கொழும்பு, வவுனியா, மன்னார், திருகோணமலை அல்லது எவ்விடமோ) எங்கு அவர் தங்கி நிற்கின்றாரோ, அப்பகுதியின் கிராமசேவையாளரிடம் இங்கிருந்து செல்பவர்களின் (அடையாள அட்டை இலக்கம்,பெயர்) விவரங்களை தங்குமிடச் சொந்தக்காரர் (விடுதி, அல்லது வீட்டு உரிமையாளர்) இவர்கள் அங்கு சென்று தங்குவதற்கு அனுமதிப்பதாகக் கடிதம் ஒன்றையும் கிராமசேவையாளருக்கு தங்குமிட உரிமையாளர் கடிதம் மூலம் எழுதிக்கொடுத்து அதனை கிராமசேவையாளர் உறுதிப்படுத்திய பின் அதனைப் பக்ஸ் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பவேண்டும். அந்த பக்ஸ் கடிதத்தையும் அராலிப் பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைத்தால் மட்டுமே விண்ணப்பத்தை அவர்கள் ஏற்பார்கள்

இந்நடைமுறை யாழ்.மாவட்டத்தில் வேறு எந்தப் பகுதியிலும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல் இல்லை. குறிப்பாக புதிதாக வெளிமாவட்டங்களுக்குச் செல்வோர் எவரும் இதனைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்பவர்கள் இவ்வாறான சிபார்சு கடிதம் பெறுவது மிகவும் சிரமமாக உள்ளதாகக் கஷ்டமுறுகின்றனர். மற்றும் யாழ்.மாவட்டத்தில் ஏனைய இடங்களில் இல்லாத நடைமுறையை வலிமேற்கில் அராலிப் பாதுகாப்புப் படையினர் மட்டும் ஏன் இவ்வாறு மேற்கொள்கின்றனர் என்பதும் மக்களுக்கு புரியாமல் உள்ளது.

இவ்வாறு எல்லா ஆவணங்களும் முறையாகப் பெற்றுக்கொண்டாலும் மத்திய கிழக்கு நாடு செல்பவர்கள் அதற்கான விசாவையும் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்பவர்கள் ஸ்பொன்சர் போன்ற ஆவணங்களையும் வைத்திய சிகிச்சைக்காகச் செல்பவர்கள் அதற்கான யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரியின் சிபாரிசுக் கடிதமும் பெறவேண்டும்.

இவ்வாறு பல சிரமங்களை வெளிமாவட்டம் செல்லும் பிரயாணிகள் வலி.மேற்கில் எதிர்நோக்குகின்றனர். தங்களுக்கு மட்டும் ஏன் இந்த மேலதிக சுமைகள், தடங்கல்கள் என்று அவர்கள் கேட்கின்றார்கள்.

சங்கானை. மதிபரசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் மாதத்தில்

## ஆறாத நினைவுகளுடன்......

அன்னை மடியில்
20
*
07
*
1929



ஆண்டவன் அடியில்
22
*
11
*
2006

## அமரர்

# கந்தையா இராஜேந்திரம்

(வைரமுத்து மாமா)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எமையெல்லாம்
இத்தரணியில் வாழ வழிவகுத்த எமதன்பு ஐயாவே!
எம்மிடம் இருந்து காலனும் உமைப் பிரித்து
மாதங்கள் ஆறு உருண்டோடியதோ நெஞ்சமோ
மறக்கமுடியவில்லை ஐயா! நினைவோ அழியவில்லை ஐயா!
அன்பையும் அறிவையும் பாசத்தையும் பொழிந்த நீங்கள்
எம்மை எல்லாம் நல்வழிப்படுத்தி எம் உயர்வுக்கு எம்முடன்
இருப்பீர்கள் என நினைத்தோம். ஏமாற்றிவிட்டு ஒரு நொடியில்
எம்மைப் பிரிந்தது ஏன் ஐயா? உங்கள் நினைவலைகளைச் சுமந்து
நிற்கின்றோம்!

*830, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(60797)

உங்கள் பிரிவால் வாடும்:
- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகர்கோவில் ம.வி.யில் தளபாடம் இல்லை; கற்றல் நடவடிக்கையில் பெரும் சிரமம்

கரவெட்டி மே, 23

நாகர் கோவில் மகா வித்தியாலத்தில் போதியளவு தளபாடங்கள் இன்றி ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்கிடையிலேயே கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வித்தியாலயம் 2000ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் திகதி விமானத் தாக்குதலுக்கு இலக்கானது. அதன்போது பல மாணவர்கள் பலியானதுடன் பலர் ஊனமுற்றனர். பாடசாலைக் கட்டடமும் பாரிய சேதத்துக்குள்ளானது.

இதையடுத்து இப்பாடசாலை தற்காலிகமாக பல இடங்களில் இயங்கி தற்போது புனித நகர் பிரதேசத்தில் தற்காலிகக் கொட்டகையில் இயங்கி வருகின்றது.

இங்கு ஆசிரியர்களுக்கு வேண்டிய மேசை, கதிரைகள் இல்லை. மாணவர்களுக்கான சில தளபாடங்களும் இல்லை. அத்துடன் போதிய மறைப்புக்கள் இன்மையால் வகுப்பறைகளுக்குள் காற்றால் மணல் வீசப்படுகின்றது.

இதனால் மாணவர்கள் இலகுவாகத் தமது கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. (202-70)

## காலபோகத்திற்கான உர வகைகளை விரைவில் பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 23

காலபோக நெற்செய்கைக்கு வேண்டிய உரவகைகளை விரைவில் பெற்றுத் தருவதற்கான ஏற்பாடுகளை உடன் மேற்கொள்ளுமாறு விவசாயத் திணைக்களம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விவசாய சம்மேளனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்வருடத்திற்கான காலபோக நெற்செய்கைக்கான பூர்வாங்க வேலைகள் இன்னும் மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில், நெற் செய்கைக்குத் தேவையான உரவகைகளை நேரகாலத்துடன் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு சம்மேளனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடந்த காலபோக நெற்செய்கைக்கு உரவகைகள் காலம் பிந்திக் கிடைத்ததால் அதிக விளைச்சலைப் பெறமுடியாதிருந்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர். (202-207)

## யாழ். மாவட்ட பாடசார்த்திகளுக்கு முதலாம் திகதியே நேர்முகப்பரீட்சை

அச்சுவேலி மே, 23

கல்வியியற்கல்லூரிகளில் பயிற்சி முடித்து ஆசிரியர் டிப்ளோமா சான்றிதழ்பெற்று தேசியப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ள யாழ்ப்பாண ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் முதலாம்திகதி கல்வி அமைச்சில் நடைபெ றவுள்ளது.

யாழ்ப்பாணதில்இருந்து கொழும்புக்குச் செல்வதில் உள்ள போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்தில்கொண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மொழி ஆசிரியர்கள் முதலாம் திகதி நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவுள்ளவர்களுக்கான நியமனக் கடிதம் எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை வைபவ ரீதியாக கொழும்பில் வைத்து கையளிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (202-11)

## பெருங்காற்றால் வாழைச்செய்கையாளர் தொடர்ந்தும் பாதிப்பு

யாழ்ப்பாணம் மே, 23

குடாநாட்டில் தொடர்ந்து வீசி வரும் பெருங்காற்றால் வாழைச் செய்கையாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் வீசிய கடுங் காற்றால் பல ஆயிரக்கணக்கான வாழைகள் முறிந்து வீழ்ந்தன.

தற்போது காற்றின் வேகம் சற்றுத் தணிந்த போதும் தொடர்ந்தும் காற்று வேகமாக வீசி வருவதால் நாளாந்தம் வாழைகள் முறிந்து வீழ்கின்றன.

இதேவேளை-

கடும் வரட்சி, காற்று என்பவற்றால் வாழைகள் குருக்கன் தாக்கத்திற்கும் உள்ளாகின்றன. (202-68)

## பரிசில் வழங்கும் நிகழ்வு

நல்லூர் மே.23

யாழ்.மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவினால் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக் கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ சமய விவகாரக் குழுவின் தலைவர் மு.செ.சரவணபவ தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (203-111-79)

## இலங்கை அதிபர் சேவைகளுக்கான நேர்முகப் பரீட்சை ஜூன் முதலாம் திகதி

அச்சுவேலி மே, 23

இலங்கை அதிபர் சேவை தரம் 3, தரம் 2 II பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் மாகாண கல்வி அமைச்சு மட்டத்தில் நடைபெறவுள்ளது.

மாகாண மட்டத்தில் நேர்முகப் பரீட்சைகளுக்கு தோற்றுவோரின் பெயர்ப் பட்டியல்கள் மாகாணக் கல்வி அமைச்சுக்களுக்கு கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் உயர் புள்ளி பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சை நடத்தும் குழுவில் மத்திய கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரும் சமுக மளிப்பதற்கான ஏற்பாடுகளை கல்வி அமைச்சு செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியே செல்வதில் உள்ள சிரமங்களைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடமாகாணம், கிழக்கு மாகாணம் ஆகியவற்றில் இருந்து 3 ஆயிரம் பேர் வரை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பவற்றின் முடிவுகள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பதவி நியமனங்கள் வழங்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

பதில் அதிபர்களாக இருப்பவர்கள் போட்டிப் பரீட்சையில் உயர் புள்ளி பெற்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமிடத்து பதில் அதிபர்களாக கடமை புரிந்தமைக்கு விசேட புள்ளி வழங்கப்பட்டு பதவி நிரந்தரம் செய்யப்படவுள்ளது.

அதிபர் சேவை தரம் 3 தரம் 2 நிரந்தர நியமனங்கள் மூன்றாம் தவணையின் போது பாடசாலைகளில் கடமைப் பொறுப்புகளை ஏற்பதற்கு உரிய முறையில் வழங்கப்படலாம் என அறியப்படுகிறது. (203-11)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே23

மல்லாகம் தெல்லியம்பற்றை ஞானவைரவர் சுவாமி ஆலய வருடாந்த பொங்கல் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு வழுந்துப்பானை கட்டி விசேட பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது. (203)

* * *

நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெரும் திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

தூய ஆவியார் பெருவிழா திருவிழிப்பு ஆராதனை எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிமுதல் அதிகாலை வரை புனித மடுத்தீனார் குருமட மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிகாலை 3 மணிக்கு ஆயர் தலைமை யில் கூட்டுத் திருப்பலியும் அத்திருப்பலி யில் புதுவாழ்வுக்கான அர்ப்பணச் சடங்கும் நடைபெறும். (203)

* * *

குருநகர் அன்னை வேளாங்கன்னி மாதா சிற்றாலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி எதிர்வரும் இரண்டாம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் இத்திருவிழாவில் மறுநாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணைநாதர் விழாவும் இடம்பெறும்.(203-51)

* * *

ஊர்காவற்றுறை கிழக்கு முதலாம் வட்டாரம் ஆதிவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 108 சங்காபிஷேகத்துடன் விழா நிறைவுபெறும். (203-51)

* * *

ஏழாலை அத்தியடி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (203-79)

* * *

வண்ணை மகாமாரி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 8ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (203)

## தர்மாசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மே23

இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடத்தும் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சகல பரீட்சார்த்திகளும் அறநெறிப் பாடசாலைகளூடாகவே தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி எதிர்வரும் 28ஆம் திகதி ஆகும். (202)

## ஆரம்ப கணித பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மே.23

பாடசாலை மட்டத்திலான உயர் கல்விச் செயற்பாடுகள் திட்டத்தின் கீழ் ஆரம்ப கல்வி மாணவர், பெற்றோர் ஆகியோருக்கான ஆரம்ப கணித பயிற்சிப் பட்டறைகள் எதிர்வரும் 26, 27 ஆகிய திகதிகளில் நடைபெறும்.

26ஆம் திகதி சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஸ்ட வித்தியாலயம் ஆகியவற்றிலும், 27ஆம் திகதி கச்சாய் அ.த.க. பாடசாலையிலும் பயிற்சிப் பட்டறைகள் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-207)

## சாவகச்சேரி மதுவரி அலுவலகத்தை மீண்டும் இயக்குமாறு கோரிக்கை

மதுவரித் திணைக்களத்தின் சாவகச்சேரி அலுவலகத்தை மீண்டும் செயற்படுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த 2000ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் இந்த அலுவலகம் பருத்துத்துறை அலுவலகத்துடன் இணைந்து இயங்கி வருகின்றது. தென்மராட்சி பிரதேசத்தில் தற்போது சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை சட்ட விரோத கள் உற்பத்தி விற்பனை ஆகியவை அதிகரித்துள்ளது. எனவே தென்மராட்சி பிரதேசத்திற்கான மதுவரி அலுவலகத்தினை மீண்டும் இயங்க வைக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (202-207)


DIAMOND BIRTHDAY

With Gods grace, celebration will be held on 26.05.07, between 2 p.m and 5 p.m at 82, Pungankulam Road, Jaffna.

(Dr.M.Gunaratnam)

(60787)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த

திருமதி செல்வராணி பொன்னம்பலம்

(B.A.Hons)

அவர்கள் ஆசிரியையாக 30 வருடங்களுக்குமேல் சேவையாற்றி இன்று (23.05.2007) புதன்கிழமை 60வயதில் தனது சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவர்கள் நல்வாழ்வு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

CANAGENTHIRA COMMUNICATION,
Inuvil West.
Local 021 - 222 3715, 021 - 4591245
I.D.D 0094 21 222 3715, 0094 21 4591245

V. கனகநாயகம்
குடும்பத்தினர்

(60523)

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

Diploma in Graphic Designing
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX

28/05/2007 - 9.00AM

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007

80% OFF

| பாட நெறிகள் | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | 1,450 |
| MS Office | - 3 மாதம் | 1,000 |

50% Off
Advances Courses
Diploma in Video Editing 3250
Diploma in Multimedia 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 25/05/2007
Batch II - 26/05/2007
Batch III - 27/05/2007
Batch IV - 30/05/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் வல்லிபுரம் சிவபாக்கியநாதன்

தோற்றம்
30-01-1936

மறைவு
23-04-2007

கண்கண்ட தெய்வமாய் - எங்கள்
கருத்தினில் உருவமாய் ஒன்றிக்
காலமெலாம் வாழ வைத்த
எமதருமைத் தந்தையே!

மென்மையான அன்பும்!
மேன்மை மிகு அரவணைப்பும்
உண்மையான உறவும் தந்த
உத்தமரே! தன்னிகரில்லாத்
தந்தையே!

யாம் செய்த தவமாய்ப் பெற்ற
எங்கள் பாங்குடைக் குருவே!
நீங்கள் இட்டவழி தொட்ட நாம்
உங்கள் பணி அரவணைக்கக்
கடவோம்.

சாய்ராம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (23.05.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வைத்தியசாலை அருகில்,
கோப்பாய்.

(60732)

- குடும்பத்தினர்.

# பிரிவுத்துயரின் ஆறாம் மாத நினைவும் 78ஆவது பிறந்தநாள் நினைவும்

பிறப்பு
23
05
1929



இறப்பு
20
11
2006

(உரிமையாளர்- ஆரோக்கிய வாச வைத்தியசாலை,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி)

## லயன் பேதுரு பிலிப்ஸ்

(வைத்தியமணி, வைத்தியவாரிதி, வைத்தியரத்தினம்,
வைத்திய கலாநிதி, சமாதான நீதிவான்)

பார்புகழும் சித்தர்கள் மருத்துவத்தில் சித்தியுடன்
பேர்புழங்க ஏட்டிலுள பாடலுடன் பிணியகற்றும்
கீர்த்தி மிகு பரம்பரையின் வாரிசாய் வித்தகனாய்
கலங்கரைபோல் வையகத்தில் நாற்றிசையும் ஒளிதந்து
சீர்மியமாய் பட்டம்பல புகழோடு புலம்சேர
சாய்ந்துமே ஆறுதிங்கள் எம் மனமும் ஆறவில்லை
சேர்ந்ததே ஐயாவின் பிறந்த நன்னாளுமின்று
சேய்நாமும் நினைவோடு எம்பணியைத் தொடருகிறோம்.

தற்காலிக முகவரி:
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்
திருமதி லியோன் புஸ்பராணி
(மகள்).

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அம்பலம் கந்தையா சுந்தரம் (A.K.S)

(ஸ்தாபகர் - A.K.S. ரான்ஸ் போட், A.K.S. அரிசி ஆலை,
A.K.S. மோட்டோர்ஸ், A.K.S.கமம்)

மண்மகிழ
20-06-1924

கண்கலங்க
15-05-2005

திதி: சப்தமி 23.05.2007

அன்பும் ஆதரவும் பண்பும் பாசமும் மிக்க ஐயாவே!
இன்முகத்துடன் புன்னகை புரிந்து எல்லோர் உள்ளத்திலும்
நீங்காத இடத்தைப் பிடித்து ஈவிரக்கம் காட்டும் தெய்வமே!
பிரபலமான தொழில் ஸ்தாபனத்தை ஸ்தாபித்து பல
பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்து உங்கள்
குடும்பங்களையும் உங்கள் சுற்றத்தார் குடும்பங்களையும்
உயர்வடையச் செய்தீர்கள்
உங்கள் பிரிவைத் தாங்க முடியாது தவிக்கின்றோம் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கட்டுக்காணி லேன்,
சாவகச்சேரி.

(60673)

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இனப் பன்மைத்துவத்தின் சிறப்பை உணராத தென்னிலங்கை

நோபல் பரிசு பெற்ற இந்திய வம்சாவளியினரான பேராசிரியர் அமர்ட்டியா சென், இலங்கையின் இன்றைய இழி நிலைமைக்கான காரணத்தை குறைந்த சொற்களில் நிறைவாக வெளிப்படுத்தி - படம் பிடித்து - காட்டியிருக்கின்றார்.

ஒஸ்லோ நோபல் நிறுவகத்தில் நேற்று முன்தினம் மாலையில் 'வறுமை, யுத்தம் மற்றும் சமாதானம்' என்ற தலைப்பில் இளவேனில் கால உரை ஒன்றை அவர் நிகழ்த்தினார். நோர்வேயின் இளவரசர் மற்றும் கல்விமான்களினால் நிரம்பி வழிந்த அந்தச் சபையில், புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் மற்றும் ஹவார்ட் பல்கலைக்கழகப் பேராசிரியரான அமர்ட்டியா சென்னிடம் இலங்கை விவகாரம் குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது.

பொருளாதார அபிவிருத்திக்காக 1998இல் நோபல் பரிசு பெற்ற சென், இலங்கையின் இன்றைய மோச நிலைமைக்கான காரணத்தை இரத்தினச் சுருக்கமான சொற்களில் அங்கு விளக்கியிருக்கின்றார்.

*"தனது மக்களுக்கு இலவசக்கல்வி, இலவச சுகாதார சேவை போன்ற பல்வேறு சமூக நலத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்திய இலங்கைக்கு அதனால் சமாதானம் கிட்டியிருக்க வேண்டும். ஆனால் பௌத்தத்துக்கும், சிங்களவர்களுக்கும் விசேட உயர்நிலையை வழங்கும் நிலைப்பாட்டை அந்த நாடு எடுத்ததால், ஏனைய மக்கள் சமூகத்தை தேசிய அடையாளப்படுத்தும் உணர்வில் அது தனிமைப்படுத்தி விட்டது. அந்த நிலைப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்துத் திருந்தும் போக்கு இலங்கையில் தென்படுவதாக இல்லை. பன்மைத்துவத்தில் உள்ள சிறப்பை இலங்கை உணர்ந்து கொள்ளவேயில்லை."* - என்று விசனப்பட்டிருக்கின்றார் நோபல் பரிசுபெற்ற அறிஞரான அமர்ட்டியா சென்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் முயற்சியில் தன்னை அனுசரணையாளராக ஈடுபடுத்தியிருக்கும் நோர்வேயினுடைய தலைநகரில் - அதுவும் உலகக் கீர்த்தி பெற்ற நோபல் பரிசை வழங்கும் நோபல் நிறுவக மண்டபத்தில் - இருந்தபடி அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கின்றமை முக்கியவிடயமாகும்.

இந்திய வம்சாவளியினரான சென், பங்களாதேஷில் பிறந்தவர். அமெரிக்காவில் வளர்ந்தவர். இனப் பன்மைத்துவத்தை மதித்துப் போற்றும் நாடுகள் எவ்வாறு சுபீட்சமும் அபிவிருத்தியும் அடைந்தன என்பதை அறிவு வாயிலாக மட்டுமன்றி அனுபவ வாயிலாகவும் கண்டறிந்து உரைக்கும் வாய்ப்புப் பெற்ற அறிஞராக விளங்கும் சென், இலங்கை அதனை உணர்ந்து கொள்ளத் தவறிய குறைபாடே இன்றைய இழி நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றது என்ற உண்மையையும் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

ஆனால், பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்கிலும், பேரினவாதத் திமிரிலும், இன மேலாதிக்கச் சிந்தனையிலும் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கைக்கு இந்த உண்மை, எடுத்தியம்பப்பட்டாலும் அதற்குப் புரியப்போவதேயில்லை என்பது தெளிவு. கடந்த ஆறு தசாப்த காலமாகப் பட்டறிந்தும் படியாத இந்தப் படிப்பினை, அறிஞர்கள் கூறி விளங்கிவிடும் என எதிர்பார்ப்பது அறிவிலித்தனம்.

பௌத்த - சிங்கள மேலாண்மைத்துவத்தைப் பற்றி மட்டுமே அறிஞர் சென் தொட்டுச் சென்றிருக்கின்றார். ஆனால் அந்த மேலாண்மைப் போக்கை நிலைநிறுத்துவதற்காக அதன் தொடர்ச்சியாக சிறுபான்மையினர் எவ்வாறு அடக்கி, ஒடுக்கப் பட்டனர், அவர்களின் இனத்துவ அடையாளங்கள் எவ்வாறு ஒழிக்கப்பட்டன, அவர்களது பாரம்பரிய பிரதேசங்கள், பூர்வீக வாழிடங்கள் பேரினவாதத்தினால் எப்படிக் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன, அவர்களின் மொழி உரிமை, கல்வி உரிமை, வேலை வாய்ப்பு உரிமை, வாழிட உரிமை என்பன ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டு, இறுதியாக வாழ்வியல் உரிமைக்கும் பங்கமேற்படுத்தப்படும் கொடூர ஆட்சிப் போக்கு எங்ஙனம் விஸ்வரூபம் எடுத்துள்ளது என்பனவற்றையெல்லாம் அவர் தொட்டுக் காட்டவில்லை.

ஆனால் அவை எல்லாம் இன்று உலகுக்கு பரகசியமான விடயங்களே.

பௌத்த - சிங்கள அதிகாரக் கட்டமைப்பிலிருந்து ஒதுக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்கள், தங்களின் நியாயமான உரிமைகளுக்காக சாத்வீகப் பாதையில் - காந்தீய மார்க்கத்தில் - அஹிம்சை அற நெறியில் - நடத்திய போராட்டங்கள் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் ஆயுத பலத்தால் மூர்க்கத்தனமாக அடக்கி ஒடுக்கப்பட்டதன் விளைவாகவே தமிழர்களின் இன்றைய புரட்சிகர ஆயுத எதிர்ப்பியக்கம் இலங்கை மண்ணில் பிறப்பெடுத்தது.

பேரினவாத அடக்கு முறையும் அதற்கு ஈழத் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய எதிர்ப்புரட்சியுமாக இந்தத் தீவில் கட்டவிழ்ந்த மோதல், இன்று முழுத் தீவையுமே மிக மோசமான யுத்த களமாக்கி, சாக்காட்டில் ஆழ்த்தி நிற்கின்றது.

பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்கை, சிறுபான்மையினர் மீது திணிக்கும் இன அநீதியைத் தாங்கள் மேற்கொண்டமையே, இன்றைய இந்த மோச நிலைக்குக் காரணம் என்ற உண்மையை, இந்தச் சந்தர்ப்பத்திலும் கூட ஏற்க மறுக்கும் தென்னிலங்கை, தொடர்ந்து அந்தப் பேரினவாதப்போக்கை நிலைநிறுத்த எத்தகைய ஆயுத மோதலுக்கும் - பேரழிவுக்கும் - போரழிவுக்கும் - தயார் என மார்தட்டுகின்றது.

அறிஞர் சென் கவலைப்படுகின்றமை போல காலம் தாழ்த்திக் கூட, இனப் பன்மைத்துவத்தை மதிக்கும் பண்பை தென்னிலங்கை உள்வாங்கித் தன்னைத் திருத்திக் கொள்ளப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயத்திலும் நிச்சயம்.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற கூற்றில் தப்பில்லைத் தானே........!!

# குழு மீதான குற்றச்சாட்டுக் குறித்தும் அரசாங்கம் விசாரணைகளை நடத்தும்

## பிரதமர் சொல்கிறார்



கொழும்பு, மே 23

யாழ்.குடாநாட்டில் நான்கு உயர் வகுப்பு மாணவர்கள் கடத்தப்பட்டதற்கும் தமக்கும் தொடர்பில்லையென படையினர் தெரிவிக்கின்றனர். இந்தநிலையில் இன்று இச்சபையில் மற்றுமொரு குழு மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் கோணத்திலும் விசாரணை நடத்தப்படும்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

மாவை சேனாதிராஜாவின் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்திற்கு அவர் தொடர்ந்து பதிலளித்துப் பேசும் போது கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமற்போனமை குறித்து மாவை சேனாதிராஜா எம்.பி. ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு வந்ததாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் இது விடயம் தொடர்பாக நாமும் அவரது கவனத்திற்கு கொண்டு செல்வோம்.

எமது அரசு இன, மத வேறுபாடின்றி சகல மக்களையும் சமமாகவே மதிக்கின்றது. இது குறித்து எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை- என்றார் பிரதமர். (அ-சி)

# கடத்தப்பட்ட யாழ்.மாணவர்களை விடுவிக்காவிடில் ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடுவோம்

## சபையில் சிறிகாந்தா



கொழும்பு, மே 23

யாழ். குடா நாட்டில் கடத்தப் பட்டு காணாமற் போன நான்கு உயர் வகுப்பு மாணவர்களை கண்டு பிடிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இது குறித்து முறையிட வேண்டிய நிலை ஏற்படும்.

யாழ்.மாவட்ட தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா நேற்று யாழ்.மாணவர்கள் கடத்தல் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத் தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

அரசு யாழ்.குடாநாட்டில் இயங்கும் பொது எதிரிகளை அடக்கக்கூடிய சக்தி பெற்றுள்ளதா? வவுனியாவிலும் யாழ்.குடா நாட்டிலும் அரச படையுடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுவே கொலைகளில் ஈடுபடுகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணாமற்போன மாணவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக நாங்கள் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் குழுவுக்கு கொண்டு செல்வோம்.

சமீபத்தில் தெற்கில் சிறுவர்கள் உட்பட நால்வர் மிருகத்தனமாக கொலை செய்யப்பட்டிருந்தனர்.

**நாடாளுமன்றத்தில்**

இதே போல் வவுனியாவில் ரெலோ ஆதரவாளர்களான மூன்று இளைஞர்கள் கடத்தப்பட்டு மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டனர். இரண்டு தினங்களுக்குப் பின்னர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அவர்களின் சடலங்கள் வீதியில் போடப்பட்டிருந்தன. யாழ்.குடாநாட்டிலும் வவுனியாவிலும் நாளாந்தம் பலர் கொல்லப்படுகின்றனர். இதைக் கட்டுப்படுத்த அரசு நட வடிக்கை எடுக்கவேண்டும். - என்றார். (அ-சி)

# துணைப்படை என்ற பெயரில் இயங்கும் குழுவை அரசாங்கம் தடை செய்ய வேண்டும்

## கஜேந்திரன் எம்.பி.



கொழும்பு, மே 23

யாழ்ப்பாணத்தில் இராணுவத்துடன் இணைந்து கொண்டு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் துணைப்படை என்ற பெயரில் இயங்கும் ஈ.பி.டி.பியை அரசாங்கம் தடைசெய்ய வேண்டும்.

யாழ்.மாவட்டத் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தமிழ் மாணவர் சமூகத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பாக இடம்பெற்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தின் போதே கஜேந்திரன் எம்.பி இப்படிக் கூறினார்.

ஊரெழு இராணுவ முகாமில் இருந்து சென்ற மோட்டார் படைப்பிரிவினர் குறிப்பிட்ட மாணவர்களின் வீடுகளை உடைத்து உட்புகுந்து நான்கு மாணவர்களையும் கடத்திச் சென்றுள்ளனர்.

இவ்வாறு கடத்தப்பட்ட மாணவர்களில், இருவர் ஏற்கனவே ஊரெழு இராணுவ முகாம் படைப்பிரிவினரால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர்- என்றும் அவர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். (அ-சி)

# தந்தைக்குச் சாப்பாடு கொண்டுசென்ற இளைஞன் சுன்னாகத்தில் வெட்டிக்கொலை

யாழ்ப்பாணம், மே 23

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த திருச்செல்வம் திருபரன் (வயது 19) என்பவரே கொல்லப்பட்டுள்ளார்.

மல்லாகம் நீதிவான் திருமதி ச. இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

மின்சார சபையில் பணிபுரியும் தமது தந்தைக்கு இரவு உணவை கொடுத்து விட்டு வீடு திரும்பியவேளை வழிமறித்த இனந்தெரியாத நபர்களால் அவர் வெட்டிக் கொல்லப்பட்டார் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

# பரமேஸ்வரக் குருக்கள் தமிழகத்தில் காலமானார்



யாழ்ப்பாணம், மே 23

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பரம்பரைக் குருமணி சிவாகம கலாநிதி பிரம்மஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் தமது 80 ஆவது வயதில் தமிழகத்தில் நேற்று முன்தினம் காலமானார்.

இலங்கையில் மட்டுமல்லாது, சிங்கப்பூர், மலேசியா, லண்டன், ஜேர்மனி, சுவிஸ், கனடா ஆகிய இடங்களில் உள்ள பல சைவத் திருத்தலங்களில் கும்பாபிஷேகங்களை நடத்தி வைத்துள்ளார்.

நல்லூர் கந்தன் ஆலயத்தின் பெருந் திருவிழாவின் போது பல வருடங்களாக கொடியேற்றும் பிரதம குருவாக செயற்பட்டுள்ளார்.

சிவாலய கிரியைகள் தொடர்பாகப் பல நூல்களையும் அவர் வெளியிட்டுள்ளார். (அ-1)

# பிரகடனப்படுத்தப்படாத....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கிவிடுவார்கள் என்ற அச்சத்தில் ஒரு நாடு என்ற நிலையில் இல்லாத அவர்களை சமமாகக் கணிப்பதற்கு யாரோ முயற்சிக்கிறார்கள் என்று கொள்ளலாமா? தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஏதும் உயர்மட்ட நவீனரக ஜெட் விமானங்கள் இருப்பதாக எந்த ஒரு புலனாய்வுத் தகவல்களும் கிடைத்ததில்லை. பத்து இலகுரக விமானங்களை அவர்கள் வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. எனவே, மிக்-29 விமானக் கொள்முதல் தொடர்பாக யோசனை கூறியவர் எவரானாலும் புலிகள் எதிர்காலத்தில் அவ்வாறான விமானங்களைக் கொண்டிருப்பார்கள் என்று முன்கூட்டியே அறிந்திருந்தார்களா? இறைமையுள்ள அரசுகளின் மரபு ரீதியிலான விமானப் படைகளால் பயன்படுத்தப்படும் யுத்தஜெட் விமானங்களை எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளும் வாங்கி விடுவார்கள் என்று அவர்கள் மனதார நம்புவார்களா? இவைகளுக்கான விடைகள் ஒருபோதும் வெளிவரப்போவதில்லை. ஏனென்றால் மில்லியன் மற்றும் பில்லியன் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான இந்தவித இராணுப் பொருள் கொள்முதல்களில் வெளிப்படைத்தன்மை காணப்படவில்லை.

தனிப்பட்ட அச்சுறுத்தல் இருந்தாலும் மறைவாக தனிப்பட்ட அச்சுறுத்தல்களும் கபடமான முறையில் பயமுறுத்தல்களும் எனக்கு விடுக்கப்பட்டு வந்தபோதிலும் பொது நன்மை கருதி இந்தப் பிரகடனப்படுத்தப்படாத 4ஆவது ஈழப்போரானது மிகமிக செலவுகூடிய போராக அமைந்து விட்டது என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

**வாழ்க்கைச் செலவு மட்டுமல்ல....**

எனவே, வாழ்க்கைச் செலவுமட்டும் அதிகரித்துக் கொண்டிருக்கவில்லை. பொதுமக்கள் அதிகமாக செலுத்தும்படி கட்டாயப்படுத்தப் படப்போகும் நான்காவது ஈழப்போரின் செலவும் மிக வேகமாக அதிகரிக்கப்போகின்றது. வெளிநாட்டுக் கருவிகளுடன் இப்பொழுது போரிடுவோம் பிறகு பணத்தைச் செலுத்திக் கொள்ளலாம் என்ற புதிய கொள்கை முன்னெடுக்கப்பட்டாலும் இந்தச் சுமை அடுத்துவரப் போகும் அரசு எதுவாக இருந்தாலும் அதன் மீதே விழப்போகின்றது!

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 10 | வியாழக்கிழமை 24.05.2007 |
| திதி: அட்டமி | முன்னிரவு : 07.15 |
| நட்சத்திரம்: | மகம் பிற்பகல் : 03.57 |
| [illegible] | : 0[illegible] - 03.52 |
| [illegible] | 01.22 - 02.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.தே.க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜோன் அமரதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் சிறப்பு ரிமை தொடர்பாகவும் பாதுகாப்புத் தொடர்பாகவும் கவனஈர்ப்பு பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இன்றுகாலை நான் நாடாளுமன்றம் வரும்போது எனது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்றுவந்தது. அதனை நான் செவிமடுத்தபோது எனக்கு அநாகரிகமான வார்த்தைகளில் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்த நிலைமை என்றால் பொதுமக்களின் நிலைமை என்ன ஆவது?

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்த ஒரு பாதுகாப்பும் இல்லை. இன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியில் சுதந்திரமாக நடமாடமுடியவில்லை. பாரிய அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இன்று எனக்கும் தொலைபேசி மூலம் மரண அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது. எனவே உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும். - என்று ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

## தமிழர்களுக்குரிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் அடைவதற்கு உதவவேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

இலங்கை விவகாரத்தில் தீர்வு ஒன்றைக் காண சர்வகட்சிப் பிரதிநிதி குழு ஒன்றைப் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் நியமித்துள் ளது. இக்குழு விரைவில் இலங்கை வரத் திட்டமிட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலேயே புதிய பிரதமராகப் பதவியேற்கவிருக்கும் கோடன் பிறவுணை இலங்கைத் தமிழ்ப் பிரமுகர்கள் குழு நேற்றுச் சந்தித்துப் பேசியது.

இலங்கை அரசு - விடுதலைப்புலிகள் - நோர்வேத் தரப்பு ஆகிய முத்தரப்பினரும் பங்குகொள்ளும் மாநாடு ஒன்றை எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடத்தப்படவுள்ளமையையும் தூதுக்குழு அவரின் கவனத்துக் கொண்டு வந்தது.

தாம் பதவியேற்றபின் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டுத் தற்போது எடுக்கப்படும் முயற்சிகளை தொடர உள்ளதாகவும் அவர் உறுதி கூறியதாக தமிழ்ப் பிரமுகர்கள் குழுவின் பிரதிநிதி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பிரத்மர் ரொனி பிளேயர் இன்று பதவி விலகுவார் என முன்னர் அறி விக்கப்பட்டிருந்தது. எனினும் அடுத்த மாதம் 16ஆம் திகதியே அவர் பதவி விலக இருப் பதாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் பதவி விலகியதும் தற்போதைய நிதி அமைச்சரும் தொழிற்கட்சியின் நாடாளு மன்றக் குழுத் தலைவருமாக நியமிக்கப்பட்டுள்ளவருமான கோடன் பிறவுண் பிரதமராகப் பதவியேற்கவிருக்கின்றார். லண்டனில் தமிழ்மக்கள் பெரும் எண் ணிக்கையில் வாழும் பகுதியில் இருந்து இவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-1)

## கண்ணீர் அஞ்சலி

**நவசிவாயம் சண்முகராசா**

**(தபால் ஊழியர், இளவாலை)**

**அவர்கள் கொழும்பில் நேற்று (22.05.2007) செவ்வாய்கிழமை காலமானார். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

**அஞ்சல் சமூகம், பண்டத்தரிப்பு.**

## மரண அறிவித்தல்கள்

### அருந்தவநாயகம் அசோக்



வேலணை கிழக்கு, 4ஆம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட அருந்தவநாயகம் அசோக் 21.05.2007 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அருந்தவநாயகம் - சற்குணம் தம்பதியரின் அன்பு மகனும் அனுசியாவின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் வட்டாரம்,*
*வேலணை.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

### கனகசபை குணபாலச்சந்திரன்



புங்குடுதீவு கிழக்கு, 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியில் வசித்தவருமாகிய கனகசபை குணபாலச்சந்திரன் 18.05.2007 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை மற்றும் கண்ணம்மா தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் துஷ்யந்தன், மீரா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தங்கராசா மற்றும் அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் புண்ணியமூர்த்தி (கொழும்பு), தெட்சணாமூர்த்தி (துணுக்காய்), சிவலோகநாதன் (லண்டன்), மகாலெட்சுமி (ஆசிரியை, கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் மகாலிங்கம் (ஜேர்மனி), கனகாம்பிகை (ஜேர்மனி), இராசலிங்கம், வீரசிங்கம், சண்முகலிங்கம், தியாகலிங்கம், கலாநிதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*தொடர்பு:*
***00493097880827** (ஜேர்மனி),*
***0777071759** (யாழ்ப்பாணம்),*
***2540732** (கொழும்பு),*
***00442084280829** (சிவா -லண்டன்).*

*தகவல்:*
**மகாலெட்சுமி (ஆசிரியை)**
**சகோதரி.**

## மாணவர் கடத்தலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் கடத்தப்படுவது பல்கலைக்கழக மாணவர் மீதான இறுதி எச்சரிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையைச் சமர்ப்பித்து அவர் தொடர்ந்து பேசும் போது கூறிய தாவது,

**ஜனாதிபதியின் உறுதிமொழி**

யாழ்.நகரில் ஊரடங்கு நேரத்தில் நான்கு உயர் வகுப்பு மாண வர்கள் ஆயுதக் குழு ஒன்றால் கடத்தப்பட்டுள்ளனர். இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள் ளன.

இது தொடர்பாக நான் ஜனாதிபதியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரி வித்தேன். அச்சுறுத்தல் தொடர்பாக விசா ரணை நடத்துவதாகவும் கடத்தல் தொடர்பாக உரிய நடவ டிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

**இராணுவத்தின் மறுப்பு**

யாழ்.கட்டளைத் தளபதியுடன் ஜனாதி பதி இது தொடர்பாக பேசியுள்ளார். இது தொடர்பாக தளபதி கூட்டம் ஒன்றைக்கூட் டியுள்ளார். இக் கூட்டத்தில் மாணவர்களை இராணுவத்தினர் கடத்தவில்லை என மறுத்துள்ளனர்.

நள்ளிரவில் ஊரடங்கு நேரத்தில் 12 மோட்டார் சைக்கிள்களில் வேகத்தை அதிகரித்துக்கொண்டு வந்தவர்கள் யார்? இவர்கள் அரு கில் உள்ள இராணுவ முகாமில் இருந்துதான்வந்திருக்கவேண்டுமென பெற்றோர் உறுதியாக உத்தேசிக்கின்றனர்.

தமிழ் இனத்தை பூண்டோடு அழிக்க வேண்டுமென்று கங் கணம் கட்டிக்கொண்டு அரசு செயற்படுகின்றது.

யாழ்.மாணவர்கள் கல்வியைக் கண் ணாகக் கருதுகின்றனர். கல்வி நடவடிக்கை கள் பாதிக்கப்படக்கூடாதென்ற நோக்கத் துடன் யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் மீண்டும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண் டுள்ளது - என்றார். (அ-சி)

## மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு சுமாராக இருந்த போதிலும் நகரத்தையும், நகரத்தை அண்டியும் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வீழ்ச்சி கண்டிருந்தது.

உயர்தர வகுப்பு மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய வகுப்பு மாணவர்களும் நேற்று அதிக எண்ணிக்கையில் வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை-

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தமது பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நேற் றுத் தற்காலிகமாக நிறுத்தியிருந்தனர். அதனையடுத்து விரிவுரைகள் நேற்று வழமையாக இடம்பெற்றன. (அ-1)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

**வெட்கக்கேடானது**

சிவில் யுத்தம் ஒன்று நடைபெறும் போது எவ்விதத் தொடர்பும் இல்லாத மாணவர்கள் கடத்தப்படுவது வெட்கக் கேடானது.

முற்றுமுழுதாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இந்த மாணவர்கள் கடத்தப்பட்டுள்ளனர்.

இதற்கு இராணுவமே பொறுப்பேற்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும் பிலும் பொதுமக்கள் கடத்தப்படுகின்றனர். இதுவரை 140 பேருக்குமேல் கடத்தப்பட்டுள்ளனர். இதில் 99 வீதமானோர் தமிழர்கள்.

**மகாநாயக்கர் கூறியது**

சிறுபான்மை இனத்தவர்கள் துன்புறுத்தப்படும் போது அங்கு ஜனநாயகம் கொல்லப்படுவதாகக் கருதப்படும்.

அண்மையில் நான் தாய்லாந்துக்குச் சென்றபோது எந்த இடத்திலும் இலங்கை அரசாங்கம் போன்று எந்த நாடும் எந்த அரசும்நடந்து கொள்ளக் கூடாது என்று அங்குள்ள மகாநாயக்கர் கூறினார்.

நமது ஜனாதிபதிக்கு இங்கே நடப்பது என்ன என்பதே தெரியாது. அண்மையில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதி பதியைச்சந்தித்த போது ஸ்ரீபதி சூரியராச்சி இன்னும் சிறையிலா இருக்கிறார்? என்று அவரிடம் கேட்டுள்ளார்.

அவருக்கு நாட்டு மக்களின் பாதுகாப்புத் தொடர்பாக அக்கறையில்லை.- என்றார் கிரியெல்ல. (அ-சி)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தார். முன்பு வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணமாக இருக்கும்போது அதன் கொடியில் யாழ். மற்றும் மீன் சின்னங்கள் இருந்தன. தற்போது வடமாகாணக் கொடியில் சூரியன் சின்னமும், கிழக்கு மாகாணக் கொடியில் கழுகு, மீன், மற்றும்சிங்கம் ஆகியனவும்பொறிக்கப்பட் டுள்ளன. (சி)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடிக்கையில் விடுதலைப் புலிகளின் இரு சடலங்களைக் கண்டெடுத்தனர் என்றும் ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (சி)


**வீடு தேவை**

நிறுவனம் ஒன்றிற்கு நாவலர் வீதியில் இலுப்பையடிச் சந்திக்கும் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கும் இடையில் ஒரு வீடு தேவை.

தொடர்பு: 73, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

T.P: 0212222674


## ஓமந்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று புதன்கிழமை தமது பிரசன்னம் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இருக்காது என்றும்-

விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி மீண்டும் பாதுகாப்பு உத்தரவாதம் பெற்ற பின்பே தாம் அங்கு கடமையில் ஈடுபட இயலும் என்றும்- செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-1)

## மாங்குளம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. தாக்குதலுக்கு இலக்கான பயிற்சித் தளத்துக்கு விடுதலைப் புலிகளின் காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன் தினமும் விஜயம் செய்வதாக புலனாய்வாளர்கள் வழங்கிய தகவல்கள் உறுதிப்படுத்தியுள் ளன என்றும், தாக்குதல் நடைபெற்ற வேளை நடேசன் அப்பகுதியில் இருந்தாரா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

விடுதலைப்புலிகளின் உயர்மட்டப் போராளிகள் சிலர் இத்தாக்குதலில் பலத்த காயங்களுக்குள்ளாகி இருக்கின்றனர் - என்று - இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றைய வான் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பு தகவல்கள் வெளியாகவில்லை.(சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்ரமணியம் சரஸ்வதி



காரைநகர், பலகாட்டை பிறப்பிடமாகவும், நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்ரமணியம் சரஸ்வதி நேற்று (22.05.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான ஆறுமுகம் - செல்லாட்சி தம்பதியரின் அன்பு மகளும் சுப்ரமணியத்தின் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் -P.W.D.) மனைவியும் சத்தியவதி, பாக்கியராஜா (குபேரன் களஞ்சியம், விசால் பான்ஷி உரிமையாளர்), பாக்கியவதி (வலம்புரி முகாமைத்துவ உதவியாளர்), புஸ்பவதி, கலாவதி, குணவதி, தவமலர் ஆகியோரின் அன்புத் தாயும் நாகராஜா, தர்சிகாதேவி, சிவனேசன், கோபால சுகந்திரன், பத்மசிங்கம், முருகவேள், நகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் சதீஸ்குமார், சசிரேகா, விஜயபானு, இந்துஜன், தனுஜன், திவ்வியா, செந்தூரன், மயூரன், அனுசன், நிருத்திகா, காயத்திரி, தர்சிகா, விசாகபவன், சுகஸ்ரிகா, கோபிகா ஆகியோரின் அன்புப் பேத்தி யும் காலஞ்சென்ற நடராஜா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.05.2007) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயரனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32, கைலாசபிள்ளையார் கோயில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**சுப்ரமணியம் (கணவர்),**
**பிள்ளைகள்.**

### நமசிவாயம் சண்முகராசா



**(தபால் ஊழியர், தபாலகம், இளவாலை)**

இளவாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் சண்முகராசா 21.05.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நவசிவாயம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) - ஸ்ரீமதியின் அன்பு மகனும் அமரர்கள் சரவணமுத்து தம்பதியரின் மருமகனும் தபேந்திரா தேவியின் (தாதிய உத்தியோகத் தர், யாழ்ப்பாணம்) பாசமிகு கணவரும் நவரட்ணராசா (உப தபாலதிபர், இளவாலை), ஜெயரத்தினராசா (உப தபாலதிபர், மாதகல்), நவயோகரசா (நீரியல்வளத் திணைக்களம், யாழ்ப்பாணம்), தவயோகராசா (கிராம உத்தியோகத்தர், இளவாலை), சிவயோகராசா (நீதிமன்றம், சாவகச்சேரி), நகுலேஸ்வரராசா (யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் யோகேஸ்வரி (ஆசிரியை, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), சிவக்கொழுந்து (தாதிய உத்தியோகத்தர் - சங்கானை), சாந்தநாயகி (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம்), சிவரூபி (பிரதேச சபை, சுழிபுரம்), பகீரதி (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), அருந் ததி ஆகியோரினதும் சரஸ்வதிதேவி, அமரர் தண்டிகை நாச்சியார், கனகராசன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), அமரர்கள் அருளம்பலம், நம சிவாயம் மற்றும் ஞானேஸ்ரி (கனடா), வேலாயுதம் (கனடா), கேதீஸ்வரன் (கனடா), பராசக்தி (நோர்வே), நடேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வதனி, தர்ஷகா, வித்தியாதரன், நக்கீரன், கஜபானுஷன், கஜானா, மதுஷன், ஜனுஜன் ஆகியோரினதும் பாசமிகு பெரியப்பாவும் சுதர்ஜனின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணாகம்தெற்கு,*
*சுழிபுரம்.*

*தகவல்:*
**பெற்றோர், சகோதரர்கள்,**
**மனைவி, மைத்துனர்கள்.**

### இராமலிங்கம் தர்மராசா



மானிப்பாய் வடக்கு, இராஜகாரிய வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தர்மராசா நேற்று (22.05.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகனும் தங்கராணியின் பாசமிகு கணவரும் விஜிதா, விஜிகலா (ஆசிரியர் - சின்னம்மா வித்தியாலயம், சங்கரத்தை), விஜிகரன் (அமரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரம், சிவசோதி ஆகியோரின் பாசமிகு அண்ணனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2007) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜகாரியவீதி,*
*மானிப்பாய் வடக்கு.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org